உயர்கல்வி (ஜி1) துறை,

தலைமைச் செயலகம், சென்னை - 9.

<u>கடித எண். 2457/ஜி1/2023-1, நாள் 06.06.2023</u>

அனுப்புனர்

முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,

அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு. கூ. பொ),

சென்னை - 15. (இ)

அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வி - அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலைக் மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டது - சில கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தப்படாதது தொடர்பாக புகார் பெறப்பட்டுள்ளது - அறிவுறுத்தல்கள் வழங்குவது - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண். 135 சமுகநலம் மற்றும் சத்துணவு திட்ட (சந4) துறை, நாள் 20.09.2008.
2. அரசாணை (நிலை) எண். 30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2) துறை, நாள் 28.06.2010.

.........

பார்வையில் காணும் அரசாணைகளின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

...2

2. பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்கல்வி நிலையங்களில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் பார்வை 2. இல் காணும் அரசாணையில் மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு தனிக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. (நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது)

3. இந்நிலையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாற்றுத்திறனாளி மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் பெறப்பட்டு வருகிறது. எனவே, பார்வையில் குறிப்பிடப்பட்ட அரசாணைகளை தவறாமல் பின்பற்றுமாறும் அவ்வாறு பின்பற்றாத அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி முதல்வர்களுக்கு சுற்றறிக்கை வாயிலாக அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

ஒ-சாந்தா

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்

அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்